1975 மார்ச் 25]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து பதில் சொல்ல முடியும். ஹோமியோபதி முறையில் ஊசிபோடுகிற முறை ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. சிலயிடங்களில் அப்படி மேற்கொள்ளுகிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய செய்தி பற்றி எனக்குத் தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் அறிந்து பதில் சொல்ல முடியும்.

திரு. ந. சோமசுந்தரம் : போலி டாக்டர் சிகிச்சையில் ஏதாவது உயிர்ச்சேதமோ, விபத்தோ ஏற்பட்டதாக அரசுக்குத் தகவல் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படி விவரமாகத் தெரிய வில்லை. போலி டாக்டர்கள் தருகிற மருந்து நோயைக் குணப்படுத்துவது என்பது மிகக் கடினமான காரியமாகும்.

சிறு பாசன ஏரிகள்.

*452 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—

ஊராட்சி ஒன்றியங்களின் கண்காணிப்பில் இருந்து வரும் ஏரி, குளங் களை பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்துவரும் 100 ஏக்கர்களும் அதற்கு மேலும் உள்ள ஆயக்கட்டுகள் கொண்ட ஏரி, குளங்களை பொதுப்பணித்துறையின் கட்டுப் பாட்டில் கொண்டுவர அரசு மே 1974-ல் உத்தரவிட்டுள்ளது.

திரு கோவை செழியன்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி மைனர் இர்ரிகேஷன் டாங்குகளை அமைக்கிறபோது அவற்றை உடனடியாக நிறைவேற்ற முடியாததற்குக் காரணம் தனியார் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி ஆர்ஜிதம் செய்கிற முறையில் ப்ராஸஸில் நீண்டநாள் எடுக்கிற காரணத்தினால் அவற்றை எல்லாம் மாற்றுகிற முறையில் புதிய சட்டம் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இது புதிய குளங்கள் அமைப்பது பற்றியது அல்ல. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்து வருகிற நூற்றுக்கு மேற்பட்ட ஆயக்கட்டுக்களைக் கொண்ட ஏரி, குளங்களைப் பொதுப்பணித் துறைக்கு மாற்றுகிற திட்டமாகும். இதில் யாருடைய நிலத்தை எடுக்கிற பிரச்சினை எழாது.

திரு. மு. இரத்தினசபாபதி: இந்தத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இருந்து எவ்வளவு குளங்கள் மேற்கொள்ளப்பட்டு செப்பனிடப்பட்டன? எவ்வளவு பணம் அதற்காக ஒதுக்கியது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருந்து வரும் 100 ஏக்கர்களும், அதற்கு மேலும் உள்ள ஆயக்கட்டுகள் கொண்ட 2,454 குளங்களைப் பொதுப்பணித் துறையின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

இதற்காக ஒதுக்கியிருக்கிற பணம்—ஆக்ஸிலிரேடெட் ரிப்பேர்ஸ் என்ற அடிப்படையில்—துரிதமுறை—திட்டத்தின் கீழ் ரூ. 99,82,000 ஒதுக்கப் பட்டது.

நூறு ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டுக்களைக் கொண்ட குளங்களை ஸ்டாண்டர்டைஸ் பண்ணி ஊராட்சி ஒன்றியங்களிடமே கொடுப்பதற்கு ரூ.75 லட்சம் ஒதுக்கப்பட்டது. அதுபோல ஜமீன் கண்மாய்களைச் சீர்படுத்த வும் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சிறிய ஏரி, குளங்களையும் கூட பொதுப்பணித் துறையினரே ஏற்றுச் செப்பனிடுவதே பொருத்தமாக இருக் கும். ஆகவே எல்லா ஏரி, குளங்களையும் பொதுப்பணித் துறையினரே மேற்கொள்வதில் என்ன சிரமம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நூறு ஏக்கர், அதற்கு மேற்பட்ட ஆயக்கட்டுக்களை உடைய ஏரி, குளங்களை எல்லாம் பொதுப் பணித்துறையே எடுத்துக் கொண்டுவிட்டது. நூறு ஏக்கருக்குக் குறை வான ஆயக்கட்டுக்களை உடைய குளம், குட்டைகளைத்தான் பொதுப்பணித் துறை ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றையும் ஸ்டாண்டர்டைஸ் செய்து ஊராட்சி ஒன்றியங்களிடமே ஒப்படைக்கிற திட்டத்தைத்தான் வகுத்திருக் கிறோம். சிறிது சிறிதாக எல்லாவற்றையும் பொதுப்பணித் துறையே மேற் கொள்வதில்—மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல—சிரமம் ஏற்படாது. இப்போதைக்கு நூறு ஏக்கராவுக்குக் குறைவான ஆயக்கட்டு களை உடைய குளங்களை ஸ்டாண்டர்டைஸ் செய்து கொடுக்கிற பொறுப்பைத் தான் பொதுப்பணித் துறை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: ஜமீன் பிரதேசம் பூராவும் சிறுசிறு கண் மாய்களாக ஆரம்ப காலத்தில் இருந்து வந்ததுதான் இப்போது ஊராட்சி ஒன்றியங்களிடம் தரப்பட்டிருக்கிறது. ஜமீன் காலத்திலேயே அவற்றை பராமரிக்க எந்தத் திட்டமும் வகுக்கப்படவில்லை. நிதி ஒதுக்கீடும் செய்யப் பட்டதாகத் தெரியவில்லை. இன்றைக்கு ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிற, நிதியில் இருந்தும் அவற்றைச் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, பொதுப்பணித் துறையே எல்லாவிதமான குளங்களையும் எடுத்துக்கொண்டு பராமரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

1975 மார்ச் 25]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கெனவே நான் விடை அளித்தேன். ஜமீன் குளங்களை ஸ்டாண்டர்டைஸ் பண்ணிக் கொடுப்பதற்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்தப் பணம் போதுமா என்பது வேறு. நிதிப் பற்றாக்குறை காரணமாக முழுவதையும் எடுத்துக் கொள்ள முடியவில்லை. நிதிநிலை சீராகும்போது எல்லாவற்றையும் பராமரித்து சீர்படுத்தி, ஊராட்சி ஒன்றியத்தினிடத்தில் ஒப்படைக்கப்படும்.

திரு. கு. காமாட்சி: ஏரி, குளங்கள் எல்லாவற்றையும் பொதுப் பணித் துறையே எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணை இருக்க முடியாது. அதே நேரத்தில் பாசிக் குத்தகை, மரங்கள் ஏலம் ஆகியவற்றை அந்த ஊராட்சி ஒன்றியங்களிடமே விட்டு வைத்திருந்தால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொஞ்சம் வருமானமாக அவை இருக்கும். இதை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நூறு ஏக்கராவுக்குக் குறைவான ஆயக்கட்டுக்களை உடைய ஏரி, குளங்களை எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களிடமே விட்டு வைத்திருக்கிறோம். அவற்றில் பாசி, மர குத்தகை தகராறு எதுவும் இருக்காது என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 9–30)

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இப்பொழுது சிறிய குட்டையை நிறைவேற்றுகின்ற திட்டத்தைப் பொதுப்பணித் துறை மேற்கொண்டிருக்கிறது. அதேபோல், சிறிய குளத்தையும் பொதுப்பணித் துறை மேற்கொள்ளுமா? அதை மட்டும் ஏன் ஊராட்சி மன்றத்திடம் விட்டுவிட வேண்டும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பாண்ட் ஸ்கீம் என்பது நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வராது. பக்கத்திலேயிருக்கிற கிணறுகளிலெல்லாம் ஊற்று பெருக வேண்டுமென்பதற்காகப் போடுகின்ற திட்டமாகும் அது. ஆனால், சிறு ஏரி என்று சொல்வது, நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வரும். ஆகவேதான், 100 ஏக்கரா ஆயக்கட்டுக்கு உள்ளவற்றையெல்லாம், ஊராட்சி மன்றத்திடம் ஒப்படைத்திருக்கிறோம். இருப்பினும், அவற்றிற்காக, ஊராட்சி மன்றங்களுக்கு ரூ. 80 இலட்சத்திலிருந்து ரூ. 90 இலட்சம் வரை மானியமாகக் கொடுக்கிறோம். அவர்களுக்குச் சிரமம் இருக்காது என்று கருதுகிறேன். அப்படி, சிரமம் ஏற்படுகின்ற நேரத்தில், அரசு தன் நிதிநிலையை வைத்துப் பரிசீலிக்கும்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படி ஊராட்சி மன்றத்தில் கொஞ்ச நஞ்சம் பராமரிக்கிறார்கள். அதையும் எடுத்து விட்டால் ஊராட்சி மன்றங்களுக்கு வேலையில்லாமல் போய்விடும். எல்லாக் குளங்களையும் பி.டபிள்யூ. டி. மெய்ண்ட்டென்ஸ் செய்து, ஊராட்சி மன்றங்கள் வேலை செய்ய திட்டங்களை வகுத்தால் வசதியாக இருக்கும். ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வசதியாக இருக்கும். அதை யோசனை செய்யுமா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு சௌந்தரபாண்டியன் கேட்ட கேள்விக்கு நேர்மாறான கேள்வி இது. ஊராட்சி மன்றங்கள் வைத்திருப்பவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பது நோக்கமல்ல. ஆனால் அவைகளை நிலைப்படுத்த, ஸ்டாண்டர்டைஸ் செய்ய அரசு உத்தேசித்து, இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

Bridge on Korakathur-Valapandal road.

*** 453 *Q*.—Thiru P. ETTIYAPPAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :**

(*a*) whether the scheme for the construction of a road-bridge (தரைப்பாலம்) between Korakathur and Valapandal on the Cheyyar River is under the consideration of the Government ; and

(*b*) if so, when the work is expected to be taken up ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த கொரகத்தூர் வாழப்பந்தல் சாலை இன்றைய தினம் பஸ் போக்குவரத்துக்கு வந்தவாசி, செய்யாறு போன்றவற்றையெல்லாம் இணைக்கிற சாலை.

ஆகவே, இப்பொழுது இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது இந்தப் பாலத்தைக் கட்ட அமைச்சரவர்கள் முயற்சி செய்வார்களா? அதோடு செய்யாற்றிலே தண்ணீர் வந்தால் வாழைப்பந்தல் ஊரின் ஓரத்திலே கொஞ்சம் கொஞ்சமாக அரித்து, ஊருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வாழைப்பந்தல் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் அமைப்பதையும் தடுப்புச் சுவர் அமைப்பதையும் இரண்டையும் ஒரே கேள்வியிலே கேட்டிருக்கிறார்கள். அங்கத்தினர் கேட்டிருக்கிற பாலம் அமைப்பது சம்பந்தமாக பக்கத்தில் ஒரு தாம்போகி, ரூ. 2½ லட்சம் செலவில் கட்டியிருக்கிறோம் இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தாம் போகி மிகவும் முக்கியமானது என்பதை நானே நேரில் போய் பார்த்து அறிந்து கொண்டிருக்கிறேன். அரசாங்கம் நிதிநிலையைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தடுப்புச் சுவர் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.